# கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

## அமர்வு வழக்கு எண்.12/2025

### அ.சா. 12 (LW 13 )

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | **திரு. கார்த்திக்** | **தொழில்** | **கிராம நிர்வாக அலுவலர்** |
| **த/ பெயர்** | கணேசன் | **மதம்** | |
| **கிராமம்** | | **வயது** | |
| **தாலூகா** | | **தேதி** | **23.07.2026** |

1873 ம் வருடத்திய சட்டம் பிரிவு 10 ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

1 முதல் 4,6,7,9,10 எதிரிகள் ஆஜர். 5,8 எதிரிகள் ஆஜர் இல்லை. பிரிவு 355 BNSS–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு, அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது திண்டுக்கல் மேற்கு தாலுகா, சில்வார்பட்டி கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 10.08.2023 அன்று காலை 10.00 மணி அளவில் திண்டுக்கல் தெற்கு காவல் ஆய்வாளர் அவர்கள் ஒரே வழக்கில் சம்மந்தப்பட்ட எதிரிகளை கைது செய்திருப்பதாக கூறி திண்டுக்கல் வத்தலக்குண்டு பைபாஸ் பாலத்திற்கு கீழ் என்னையும் , கிராம உதவியாளரையும் வரச் சொன்னார். நாங்கள் சென்ற போது பிரபு மற்றும் திவாகர் ஆகியோர் இருந்தனர். அங்கு போலிசார் அவர்களை விசாரித்துக் கொண்டிருந்தார்கள். 4 வது எதிரி பிரபு, 6 வது எதிரி சக்திவேல், 7 வது எதிரி கார்த்திக் ஆகியோர்கள் இருளப்பன் என்ற ராசு தன்னுடைய வீட்டை விற்பது தொடர்பாக ஏற்பட்ட பிரச்சனையில் ரெங்கமூர்த்தி என்ற மூர்த்தி, ஸ்ரீரங்கன், சண்முகவேல் ஆகிய மூவரும் சேர்ந்து வீடு விற்ற வகையில் கமிசன் தொகையாக ரூ.3 லட்சம் தருவதாக ஒப்புக் கொண்டு வீடு விற்ற பின்னர் ஸ்ரீரங்கன், சண்முகவேல் ஆகிய இருவருக்கு மட்டும் முன்பணமாக ரூ.50 ஆயிரம் மட்டும் தந்தும் ரெங்கமூர்த்தி என்ற மூர்த்திக்கு பணம் தராமல் தன்னிடம் இப்போது பணம் இல்லை என்றும் நாளை தள்ளிப் போட்டதாக ஏற்பட்ட பிரச்சனையில் இருளப்பன் என்ற ராசுவை அவரது வீட்டிலேயே 07.08.2023 அன்று பகல் 02.45 மணி அளவில் ரெங்கமூர்த்தி , ரஞ்சித்குமார், பூபதி ராஜா ஆகிய மூவரும் அவருடன் இன்னும் 3 நபர்கள் சேர்ந்து 6 நபர்கள் அவரது வீட்டில் அவர் இருப்பதை உறுதி செய்து கொண்டு ரெங்கமூர்த்தி, ரஞ்சித்குமார், பூபதி ராஜா ஆகிய மூவரும் வலது கன்னத்தில் மூக்கிலிருந்து தலை வரை உயிர் போகும் வரை கத்தியால் வெட்டி கொலை செய்ததை ஆய்வாளர் விசாரிக்கும்போது வாக்கு மூலமாக கொடுத்தார். அதை ஆய்வாளர் எங்கள் முன்னிலையில் டைப் செய்து கொண்டார். அதை நாங்கள் படித்துப் பார்த்து கையெழுத்து செய்தோம். அந்த ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள 1 வது கையெழுத்து

என்னுடையதுதான். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட் பகுதி மட்டும் **அ.த.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஒப்புதல் வாக்குமூலத்தை தொடர்ந்து அதே நாளில் காலை 08.00 மணி அளவில் கழுதேதை ரோடு பக்கமுள்ள டிம் வேல்டு மரக்கடை பின்புறம் உள்ள புதரிலிருந்து பிரபு 42 1/2 செமீ அளவுள்ள கைப்பிடியுள்ள கத்தி ஒன்றை எடுத்து ஆஜர் செய்தார். அதை ஆய்வாளர் அத்தாட்சியில் கைப்பற்றினார். அந்த அத்தாட்சி **அ.த.சா.ஆ. 8** ஆகும். கத்தி ஏற்கனவே **சா. பொ.1** ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

பின்பு சக்திவேல் காலை 10.15 மணிக்கு தாமாக முன்வந்து ஆய்வாளரிடம் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் சம்பவ நாளன்று TN 57-BT 5052 ACCES 125 வண்டியை ஓட்டிச் சென்றதாகவும், கொலைசெய்ய உதவியாக இருந்ததாகவும் தானாக முன்வந்து வாக்குமூலம் கொடுத்தார். அதை ஆய்வாளர் எங்கள் முன்னிலையில் டைப் செய்து கொண்டார். அதை நாங்கள் படித்துப் பார்த்து கையெழுத்து செய்தோம். பின்னர் சக்திவேல் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் திண்டுக்கல் பழனி பைபாஸ் அருகே பாலத்திற்கு அடியில் கொலை சம்பவத்திற்கு பயன்படுத்திய TN 57-BT 5052 ACCES 125 வண்டியை எடுத்து 11.45 மணிக்கு செய்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள 1 வது கையெழுத்து என்னுடையதுதான். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி மட்டும் **அ.த.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதிரி ஆஜர் செய்த வண்டியை ஆய்வாளர் அத்தாட்சியில் கைப்பற்றினார். அந்த அத்தாட்சி **அ.த.சா.ஆ. 10** ஆகும். ஆய்வாளர் கைப்பற்றிய வண்டி **சா.பொ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

பின்பு கார்த்திக் காலை 01.45 மணிக்கு தாமாக முன்வந்து ஆய்வாளரிடம் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் சம்பவ நாளன்று TN 64-M-2736 Bajaj CT-100 வண்டியை ஓட்டிச் சென்றதாகவும், கொலை செய்ய உதவியாக இருந்ததாகவும் தானாக முன்வந்து வாக்குமூலம் கொடுத்தார். அதை ஆய்வாளர் எங்கள் முன்னிலையில் டைப் செய்து கொண்டார். அதை நாங்கள் படித்துப் பார்த்து கையெழுத்து செய்தோம். பின்னர் சக்திவேல் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் திண்டுக்கல் பழனி பைபாஸ் அருகே பாலத்திற்கு அடியில் கொலை சம்பவத்திற்கு பயன்படுத்திய TN 64-M-2736 Bajaj CT-100 வண்டியை எடுத்து 03.15 மணிக்கு செய்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள 1 வது கையெழுத்து என்னுடையதுதான். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி மட்டும் **அ.த.சா.ஆ.11** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதிரி ஆஜர் செய்த வண்டியை ஆய்வாளர் அத்தாட்சியில் கைப்பற்றினார். அந்த அத்தாட்சி **அ.த.சா.ஆ. 12** ஆகும். ஆய்வாளர் கைப்பற்றிய வண்டி **சா.பொ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அன்றைய தினம் எங்கள் முன்னால் வாக்குமூலம் அளித்த பிரபு இன்று நீதிமன்றத்தில் 4 வதாக ஆஜராகியுள்ளார். சக்திவேல் 6 வதாக ஆஜராகியுள்ளார். கார்த்திக் 7 வதாக ஆஜராகியுள்ளார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

எதிரிகளை நான் பார்ப்பதற்கு முன் போலிசார் என்ன பேசினார்கள், என்ன பொருட்கள் கொடுத்தார்கள் என எனக்கு தெரியாது என்றால் சரிதான். எதிரிகள் கொடுத்ததாக சொல்லப்படும் ஒப்புதல் வாக்குமூலம் எங்கு வைத்து பிரிண்ட்

எடுக்கப்பட்டது என தெரியாது என்றால் சரிதான். எனது போன் நம்பரையோ, ஆய்வாளர் போன் நம்பரையோ ஆய்வாளர் விசாரணையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். ஆய்வாளர் என்னை சாட்சியாக இருக்கச் சொன்ன விவரத்தை திண்டுக்கல் மேற்கு வட்டாட்சியரிடம் சொல்லி அனுமதி பெற்று சென்றதாக ஆய்வாளர் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். 10.08.2023 அன்று காலை 04.00 மணிக்கு நான் எங்கு குடியிருந்தேன் என்ற விவரத்தை ஆய்வாளர் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். 10.08.2023 அன்று காலை 04.00 மணிக்கு எதிரிகளை கைது செய்ததாக சொல்லும் நேரத்தில் நானும் என் உதவியாளரும் எந்த வாகனத்தில் வந்தோம் என்ற விவரத்தை ஆய்வாளர் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். போலிசார் கேட்டுக் கொண்டதற்காக இது போன்ற பல வழக்குகளில் சாட்சியம் அளித்துள்ளோம் என்றால் சரிதான். அத்தாட்சி எங்கு வைத்து பிரிண்ட் எடுக்கப்பட்டது என்ற விவரம் தெரியாது என்றால் சரிதான். ஆய்வாளர் என்னை விசாரித்து எழுதினாரா அல்லது டைப் செய்தாரா என்ற விவரத்தை ஆய்வாளர் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொன்னது போல் எதிரிகளை கைது செய்ததாக சொல்லப்படும் இடத்திற்கு செல்லவில்லை என்றாலும் எதிரிகள் என் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் கொடுக்கவில்லை என்றாலும் அத்தாட்சியில் கைப்பற்றப்பட்ட சான்று பொருட்கள் காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றாலும் சரியல்ல. நான் அரசு அலுவலர் என்பதால் போலிசார் கேட்டுக் கொண்டதற்காக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை – இல்லை.**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

SWARNAM J RAJAGOPALAN

Digitally signed by SWARNAM J RAJAGOPALAN
Date: 2026.07.23 19:20:06 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.